நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No.1027 /2025

## P.W.1 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | குழந்தையப்பன் |
| தந்தை / கணவர் பெயர் | : | வெள்ளைகவுண்டர் |
| கிராமம் | : | குள்ளானூர் |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW1** |
| வயது | : | 63 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், மார்ச் மாதம், 05–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 01.05 PM.

1. நான் தற்போது குள்ளானூரில் குடியிருக்கிறேன். நான் கூலி வேலை செய்கிறேன். இந்த விபத்தில் இறந்தவர் எனது மனைவி கோவிந்தம்மாள் ஆவார். சுமார் 9 மாதங்களுக்கு முன்பு என் மனைவி பால் வாங்குவதற்காக சென்றபோது பைக் மோதி இறந்துவிட்டார். விபத்தை யார் ஏற்படுத்தினார்கள் என்று நான்

பார்க்கவில்லை. விபத்து குறித்து காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். புகாரில் உள்ள கைரேகை என்னுடையதுதான். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. **(புகாரில் உள்ள ரேகை மட்டும் அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

1. கடந்த 06.05.2025ம் தேதி காலை 5.40 மணிக்கு எனது மனைவி பால் வாங்குவதற்காக வீட்டில் இருந்து குள்ளானூர் டு தாரமங்கலம் ரோட்டில் ஆண்டிகாட்டுபள்ளம் என்ற இடத்தில் தெற்கு பக்கம் இருந்து வடக்கு நோக்கி ரோட்டை கடக்க முயற்சி செய்தார் என்றால் எனக்கு தெரியவில்லை.

2. அப்போது குள்ளானூர் பக்கம் இருந்து தாரமங்கலம் நோக்கி TN 37 AU 4478 Hero Honda இருசக்கர வாகனத்தை ஆஜர் எதிரி வேகமாக ஓட்டி வந்து என் மனைவியின் மீது மோதினார்.அதை நான் நேரில் பார்த்தேனா என்றால் இல்லை. இந்த விபத்தில் எனது மனைவிக்கு காதிலும், மூக்கிலும் ரத்தம் வந்தது என்றும், இடது முழங்கால் மற்றும் வலது கால் பெருவிரலில் காயம் ஏற்பட்டது என்றால் நான் போய் பார்த்தபோது அவருக்கு அடிப்பட்டு இருந்தது.

3. நான் தற்போது எதிரியுடன் சமரசமாக சென்றுவிட்டேன் என்றால் சரிதான். அதனால் எதிரிக்காக பரிந்து உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 01.15 PM

மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.

ஒம்/-நா.கோபாலகிருஷ்ணன்
நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No. 1027 /2025

## P.W.2 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | சசிகலா |
| தந்தை / கணவர் பெயர் | : | சிங்காரம் |
| கிராமம் | : | ஜலகண்டாபுரம் |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW2** |
| வயது | : | 49 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், மார்ச் மாதம், 05–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 03.05 PM

1. நான் தற்போது ஜலகண்டாபுரம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 19.05.2025 ம் தேதியன்று நான் நங்கவள்ளி காவல் நிலையத்தில் இருந்தபோது நங்கவள்ளி காவல் நிலைய குற்ற எண். 133/2025 ச.பி. 281, 106(1) BNS வழக்கு கோப்பினை பார்வையிட்டதில்

வழக்கானது நங்கவள்ளி காவல் உதவி ஆய்வாளர் திரு.கார்த்திக் அவர்களால் 06.05.2025 ம் தேதியன்று முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்யப்பட்டது. **(புகார் அ.சா.ஆ.2 மற்றும் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )**

2. முதல் தகவல் அறிக்கையின் அசலுடன் வாதியின் புகாருடன் இணைத்து கனம் நீதித்துறை நடுவர் எண்.1 மேட்டூர் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பிவைத்து வழக்கினை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்ட காவல் உதவி ஆய்வாளர் கார்த்திக் அவர்கள் 06.05.2025 தேதி 16.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் ரத்தினம், சுரேஷ்குமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர், மாதிரிவரைபடம் தயார் செய்துள்ளார். **(பார்வை மகசர் அ.த.சா.ஆ.4, மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.5ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

3. அன்றைய தினமே சாட்சிகள் ரத்தினம், சுரேஷ்குமார், குழந்தைபையன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார். பின்னர் 07.05.2025 ம் தேதி காலை 06.00 மணிக்கு சேலம் அரசு மருத்துவமனை சென்று அங்கு சவக்கிடங்கில் இருந்த இறந்துபோன கோவிந்தம்மாள் பிரேதத்தின் மீது சாட்சிகள் அல்லிமுத்து, மோகன், லோகு, பார்த்திபன், மோகன் ஆகியோர்கள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு பஞ்சாயத்தார்களை கூட்டியும், சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார். **(பிரேத விசாரணை அறிக்கை அ.த.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** முதல்கட்ட விசாரணையை முடித்து மேல்விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்தார்.

4. பின்னர் இவ்வழக்கை நான் தொடர் புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சாட்சி குழந்தைபையனை விசாரித்தேன். காவல் உதவி ஆய்வாளரிடம் கூறியதையே என்னிடமும் கூறியதால் தனியாக வாக்குமூலம் எதுவும் பதிவுசெய்யவில்லை.

5. 19.05.2025 ம் தேதி மேற்படி விபத்து சம்பவம் உண்மை என்பதால் வழக்கில்

சம்மந்தப்பட்ட எதிரியான வாகன ஓட்டுநரை தேடி வந்ததில் வாகன ஓட்டுநர் காவல் நிலையத்திற்கு வந்து ஆஜரான வையாபுரி(33) த.பெ. மாதையன் என்பவரை விசாரித்தும் கைதுக்கான காரணத்தைக்கூறி அவரை பகல் 13.00 மணிக்கு கைதுசெய்தும் உறவினர்களுக்கு தகவல் தெரிவித்து தக்க பிணையில் விடப்பட்டது.

6. பின்னர் எதிரியின் வாகனமான TN 37 AU 4478 Hero Honda வாகன பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டி வேண்டுகோள் கடிதம் மோட்டார் வாகன ஆய்வாளருக்கு கொடுத்தேன். பின்னர் 24.05.2025 ம் தேதி இவ்வழக்கில் இறந்துபோன கோவிந்தம்மாளுக்கு பிரேத பரிசோதனை செய்து சான்று வழங்கிய மருத்துர் விக்னேஷ் அவர்களிடம் பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றும் அவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். ( **பிரேத பரிசோதனை அறிக்கை அ.த.சா.ஆ.7ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

7. பிரேத பரிசோதனை அலுவலாக சென்ற சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் மணிமேகலன் அவர்களை விசாரணை செய்தும் இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்து முதல் விசாரணை மேற்கொண்ட காவல் உதவி ஆய்வாளர் கார்த்திக் அவர்களையும் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்தேன்.

8. பின்னர் 04.06.2025 ம் தேதி இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட வாகனத்தின் மோட்டார் வாகன அறிக்கை சான்றுபெற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.செந்தில்ராம் அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். **( மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.த.சா.ஆ.8ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

9. பின்னர் இவ்வழக்கில் எனது புலன் விசாரணை முடித்து எதிரி மீது 04.06.2025 ம் தேதி ச.பி. 281, 106(1) BNS ன் கீழ் இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வாதி கொடுத்த பொய்யான புகார் வாக்குமூலத்தை பதிவுசெய்து சரிவர

பரிசீலனை செய்யாமலும், அனைத்து ஆவணங்களையும் நிலையத்தில் வைத்தே தயார் செய்து எதிரியின் மீது பொய்யாக இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 03.20 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**